பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 06 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறையை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டியது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

3. கடல்சார் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணி நாடாக திகழும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

4. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் உட்பட 12 மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 16 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறையை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டியது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டில் அடிக்கடி தேர்தல் நடத்தப்படுவதால் மக்களின் வரிப்பணமும், நேரமும் வீணாவதாக கூறினார்.

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதன் மூலம் அரசுப் பணத்தை சேமிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக அரசுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே சமூக ஊடக ஆர்வலர்களும், அறிஞர்களும் ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறையை வெற்றிகரமாக செயல்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் தார்வாடில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது நிலவிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு உலகின் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராக உருவெடுக்கும் நிலையை நோக்கி நாடு சென்றுகொண்டிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதியான தலைமையின்கீழ் பல்வேறு துறைகளிலும் இந்தியா வளர்ச்சி பெற்றிருப்பதுடன், சுயசார்பு அடைந்து வருவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

<<<<>>>>

கடல்சார் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணி நாடாக திகழும் என்று மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மொனாகோவில் நடைபெற்ற கடல்சார் மாநாட்டில் பேசிய அவர், கடல்சார் வளங்களை முழுமையாகப் பயன்படுத்த அறிவியல் ரீதியான நடைமுறைகள் அவசியம் என்றார்.

இதன்மூலம் உயிர்ப் பன்மையை பாதுகாப்பதுடன் கடலோர மக்களின் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் இடையே நார்வே நாட்டின் சர்வதேச வளர்ச்சிக்கான அமைச்சர் திரு. **Asmund Grover Aukrust**-ஐயும் திரு. ஜிதேந்திர சிங் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை நடத்தியுள்ளர்.

<<<<>>>>

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் உட்பட 12 மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, ஆலங்காயம், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்த கனமழையால் வெப்பம் தணிந்து இதமான தட்பவெப்பம் நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோன்று திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் மற்றும் அதன் சுற்றுவாட்டாரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது.

ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ள மலைக்கிராமங்களில் பெய்த இந்த மழை, பயிர் சாகுபடிக்கு உதவிகரமாக இருக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இனி . . .

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்.

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தி தொகுப்பில் இன்று மகளிர் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இத்தாலியின் குடியுரிமை மற்றும் தொழிலாளர் சட்டத் திருத்தம் தொடர்பான கருத்து வாக்கெடுப்பு இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

--------

கொலம்பியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி 3ஆக பதிவானது.

--------

மணிப்பூரில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வன்முறையின்போது பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில் 3 பேரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

--------

மகாராஷ்டிராவில் அனைத்து அரசு அலுவலகங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் சூரிய மின்சக்தியை பயன்படுத்த உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் அறிவித்துள்ளார்.

--------

கள்ளக்குறிச்சியில் நடைபெற்று வரும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகள் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

--------

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருள்மிகு உத்தமநாத சுவாமி கோவில் தேரோட்டத்தை மாநில அமைச்சர் திரு. ரகுபதி வடம்பிடித்து தொடங்கி வைத்தார்.

--------

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோவிலில் வைகாசி விசாகப் பெருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற திருக்கல்யாண வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

--------

நாமக்கல் மாவட்டம் பரமத்தி அருகே சாலையோரத்தில் நின்றுகொண்டிருந்த ஜீப் மீது கண்டெய்னர் லாரி மோதியதில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.

--------

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி கோவிலில் செம்மொழி தினத்தையொட்டி நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

--------

திருவள்ளூர் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களும் உயர்கல்வி பயில்வதற்கு வழிகாட்டுவதற்காக ஆட்சியர் அலுவலகத்தில் கண்காணிப்பு அறை அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

--------

*விளையாட்டுச் செய்திகள்*

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 16 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

சீன தைபேயில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 12 தங்கம், 3 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

------------

மாநில அளவிலான ஹாக்கிப் போட்டியில் சென்னை மாவட்ட அணி கோப்பையை வென்றது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற இப்போட்டியில், சென்னை மாவட்ட அணி 12-0 பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் விருதுநகர் அணியை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

**<<<<The End>>>>**